# ADM COURT, SANKARANKOVIL

## தேதி 02.03.2026

## அசல் வழக்கு எண். 16/2015

**வா.சா.1 (மின்னல்கொடி) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் 3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்கு தாவா சொத்தை சுற்றியுள்ள பகுதிகளுக்கு அருந்ததியர் காலனிக்காக அரசாங்கத்தால் இலவச வீட்டு மனை பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பகுதிகளில் காலனி வீடுகள் அரசாங்கத்தால் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன என்றால் சரிதான். மேற்கண்ட காலனி வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்ட இடங்களுக்கு இடையில் வழக்கு தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாவா சொத்திற்கு தென்பக்கத்தில் சப்பாணி மாடசாமி கோவில் உள்ளது என்றால் சரிதான்.

2. வழக்கு தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை வழி மூதாதையிடமிருந்து 4 தலைமுறைகளுக்கு கிடைக்கப்பெற்று எங்களால் அனுபவம் செய்து வரப்படும் சொத்து. வழக்கு தாவா சொத்தில் கட்டிடம் இருந்ததா என்றால் மண்கட்டிடம் இருந்தது. அந்த கட்டிடம் எப்போதிருந்து உள்ளது என்றால் எனது தாத்தா சுப்பன் காலத்திலிருந்து அந்த கட்டிடம் இருந்தது. அந்த கட்டிடம் என்ன வகை கட்டிடம் என்றால் அந்த கட்டிடம் ஒரு வீடு. அங்கு மாடுகளை கட்டியும், குடியிருந்தும் வந்தோம். அந்த வீட்டில் யார் குடியிருந்து வந்தார்கள் என்றால் எங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்கள் அனைவரும் அங்கு குடியிருந்து வந்தோம். அந்த வீட்டின் கதவு எண் என்ன என்றால் அந்த வீடு மண் வீடாக இருந்த சமயத்தில் அதற்கு கதவு எண் கிடையாது. அந்த வீட்டிற்கு தீர்வை செலுத்தியதாக சொல்லும் சமயத்தில் அந்த வீட்டிற்கு என்ன கதவு எண் கொடுக்கப்பட்டது என்றால் கதவு எண் 1 கொடுக்கப்பட்டது. அந்த வீட்டிற்கு எப்போதிலிருந்து நான் தீர்வை செலுத்தி வருகிறேன் என்றால் 2007 ம் வருடத்திலிருந்து தீர்வை செலுத்தி வருகிறேன். 2007 ம் வருடத்திற்கு முன்பு எனது தகப்பனார், எனது தாத்தா அந்த வீட்டிற்கு தீர்வை செலுத்தவில்லை என்றால் சரிதான். 2007 ம் வருடத்திற்கு முனபு அந்த வீட்டிற்கு வரிவிதிப்பு இல்லை என்றால் சரிதான்.

3. வழக்கு தாவா சொத்தை தவிர்த்து அதை சுற்றியுள்ள காலனி வீடு பகுதிகளில் என் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டதா என்றால் பட்டா கொடுக்கப்பட்டது. அந்த

காலனி வீட்டு பகுதிகளில் என் தாய் மற்றும் தந்தை பெயரில் பட்டா கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. என் பெயரில் மட்டும் கொடுக்கப்பட்டது. மேற்கண்ட பட்டா கொடுக்கப்பட்ட இடத்தில் அரசாங்கத்தால் வீடு கட்டி கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு வீடு கட்டி எப்போது கொடுக்கப்பட்டது என்றால் வருடம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. சுமார் 20 வருடங்களுக்கு முன்பு அரசாங்கத்தால் அந்த இடத்தில் வீடு கட்டி கொடுக்கப்பட்டிருக்கலாம்.

4. எனது தந்தை பெயர் என்னவென்றால் கந்தன். எனது தகப்பனார் கந்தன் எப்போது இறந்தார் என்றால் 2002 வருடத்தில் இறந்தார். அவரது இறப்புச்சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் எனது வீட்டில் உள்ளது. என் தந்தை கந்தனின் அப்பா பெயர் சுப்பன் என்றால் சரிதான். சுப்பன் எப்போது இறந்தார் என்றால் எனக்கு 10 வயது இருக்கும்போது அவர் இறந்துவிட்டார். எனது தற்போதைய வயது 62. சுப்பனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரு மகன் மற்றும் மகள் உண்டு. மகளின் பெயர் கருப்பி என்றால் சரிதான். மேற்கண்ட கருப்பிக்கு வாரிசுகள் உள்ளார்கள் என்றால் சரிதான். கந்தனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் என்னையும் சேர்த்து 6 பிள்ளைகள். மேற்கண்ட 6 பிள்ளைகளுள் 3 பேர் ஆண்மக்கள், 3 பேர் பெண்மக்கள். நான் எந்த ஊரில்திருமணம் செய்துகொடுக்கப்பட்டேன் என்றால் விகேபுதூரில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டேன். 1978ம் வருடம் எனக்கு திருமணம் நடைபெற்றதிலிருந்து நான் செவல்குளம் கிராமத்தில்தான் குடியிருந்து வருகிறேன். செவல்குளம் கிராமத்தில் எந்த வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் வழக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன். குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றில் எங்கள் குடும்பத்தினரின் முகவரியாக வழக்கு தாவா சொத்தில் உள்ள வீடுதான் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்ட அடையாள அட்டைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

5. வழக்கு தாவா சொத்து பொறுத்து பட்டா பெறுவதற்கு எனது தாத்தாவோ எனது தந்தையோ ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் எனது தந்தை

நடவடிக்கை மேற்கொண்டார். நானும் பட்டா வாங்க முயற்சி செய்தேன். நான் எப்போதிலிருந்து வழக்கு தாவா சொத்து பொறுத்து பட்டா வாங்க முயற்சி செய்துவருகிறேன் என்றால் 2007ம் வருடத்திலிருந்து முயற்சி செய்து வருகிறேன். மேற்கண்ட பட்டா கோரி நான் எடுத்த நடவடிக்கையை நிரூபிக்கும் விதமாக கோரிக்கை மனு ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தபசில் சொத்து எனது தாயாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாவா சொத்தில் கட்டிடம் உள்ளதா அல்லது அது காலிமனையாக உள்ளதா என்றால் அதில் நான் வீடு கட்டியுள்ளேன். நான் எப்போது அதில் வீடு கட்டினேன் என்றால் 2007ம் வருடம் எனது அம்மா ஏற்பாடு ஆவணம் பிறப்பித்துக் கொடுத்திலிருந்து 2 மாதங்கள் கழித்து வீடு கட்ட ஆரம்பித்துவிட்டேன்.

7. 3,4 பிரதிவாதிகள் அருந்ததியர் சமுதாயத்தினரின் நாட்டாமைகள் என்றால் சரியல்ல. அருந்ததியர் சமுதாயத்தினருக்கு தற்போது நாட்டாமையாக யார் உள்ளார் என்றால் அவ்வாறு யாரும் கிடையாது. 3,4 பிரதிவாதிகள் தங்களை நாட்டாமையாக பிரஸ்தாபித்துக் கொண்டு வரி வசூல் செய்கிறார்கள். 3,4 பிரதிவாதிகள் அருந்ததியர் சமுதாயத்தினரின் நாட்டாமைகள் இல்லை என்று தெரிவித்து நீதிமன்றத்தில் நான் பதில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

8. வழக்கு தாவா சொத்திற்கு தெற்கு பக்கத்தில் உள்ள சப்பாணி மாடசாமிகோவில் அருந்ததியர் சமுதாயத்தினரால் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. அது எனது தாத்தாவால் ஏற்படுத்தப்பட்ட கோவில். மேற்படி கோவில் புறம்போக்கு இடத்தில் உள்ளதா என்றால் சர்வே எண்.21ல் உள்ள பாதையில் உள்ளது. மேற்கண்ட கோவில் எனது தாத்தாவால் ஏற்படுத்தப்பட்டது என்று தெரிவித்து நான் பதில் தாக்கல் செய்துள்ளனோ என்றால் இல்லை. மேற்கண்ட கோவிலில் உண்டியல் உள்ளதா என்றால் சுமார் ஒரு வருடத்திற்கு முன்புதான் உண்டியல் வைக்கப்பட்டது. அந்த கோவிலில் எந்த மாதம் திருவிழா நடைபெறும் என்றால் ஆடிமாதம் திருவிழா நடைபெறும். மேற்கண்ட கோவிலில் பொங்கல் வைப்பதும், ஆடுமாடு பலியிடுவதும் போன்ற வழிபாட்டுமுறைகள் உண்டா என்றால் அப்படி எதுவும் கிடையாது.

9. இவ்வழக்கை தொடக்கத்தில் நான் அரசாங்கத்திற்கு எதிராக மட்டும் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு பொறுத்து சமரசமாக செல்வதற்கு மக்கள் நீதிமன்றத்திற்கு (Lok adalath) சென்றோம் என்றால் சரிதான். மேற்கண்ட மக்கள் நீதிமன்றத்திற்கு 3,4 பிரதிவாதிகள் வந்து பிராது தபசில் சொத்து மேற்கண்ட கோவிலுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு இடம் என்று ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றால் நான் மக்கள் நீதிமன்றத்திற்கு சென்றபோது அவர்கள் வரவில்லை. பிராது தபசில் சொத்து பொறுத்து மோசடியாக சமரச தீர்ப்புரை பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு இவ்வழக்கை நான் மக்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றேன் என்றாலும், 3,4 பிரதிவாதிகள் ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்ததால் இவ்வழக்கு மக்கள் நீதிமன்றத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றாலும், அதன்பிறகு இவ்வழக்கில் அவசிய தரப்பினராக தங்களை கட்சி சேர்க்ககோரி 3,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் அவர்கள் கட்சி சேர்க்கப்பட்டார்கள் என்றாலும் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்தது எனக்கு தெரியாது. நான் பிராது தபசில் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வருவாய்த்துறையினருடன் கூட்டு சேர்ந்து இவ்வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. வருவாய்த்துறை ஆவணத்தில் தற்போது பிராது தபசில் சொத்து சர்க்கார் புறம்போக்கு நிலமாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தவறான வகைப்பாடு. பிராது தபசில் சொத்து காலிமனையாக உள்ளதா அல்லது அதில் கட்டிடம் உள்ளதா என்றுசர்வேயர் உதவியுடன் ஆணையர் பார்வையிட்டால் தெரியவரும் என்றால் சரிதான். மேற்கண்ட ஆணையர் நியமனம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வழக்கு தாவா சொத்தும் அதை சுற்றியுள்ள பகுதிகளும் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடங்கள் என்றாலும், அந்த இடங்களை பொறுத்து அருந்ததியர் சமுதாயத்தினருக்காக இலவச வீட்டு மனை பட்டா அரசாங்கத்தால் வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

11. வழக்கு தாவா சொத்து அந்த சொத்தை சுற்றியுள்ள காலனி வீடுகளில் குடியிருக்கும் அருந்ததியினர் மக்களின் பொதுப்பயன்பாட்டிற்காக விடப்பட்ட புறம்போக்கு இடம் என்றால் சரியல்ல. வழக்கு தாவா சொத்திற்கு தெற்கு பக்கத்தில்

அருந்ததியினர் மக்களால் சப்பாணி மாடசாமிகோவில் நிறுவப்பட்டு அந்த கோவிலில் செய்யப்படும் வழிபாடுகளுக்கு பிராது தபசில் சொத்து பயன்பட்டு வந்தது என்றால் சரியல்ல. வழக்கு தாவா சொத்தை சுற்றியுள்ள பகுதிகளில் எனது தந்தை மற்றும் எனது குடும்பத்தினர் பெயருக்கு இலவச வீட்டு மனை பட்டா கொடுக்கப்பட்டு அரசாங்கத்தால் வீடு கட்டி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் பெயருக்கு மட்டும் இலவச வீட்டு மனை பட்டா கொடுக்கப்பட்டது. வீடு இல்லாத நபர்களுக்கு தான் மேற்கண்டவாறு இலவச வீட்டு மனை பட்டா கொடுக்கப்படும்என்றாலும், பிராது தபசில் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரியல்ல. பிராது தபசில் சொத்து எனது தந்தை வழி மூதாதையர்களுக்கு சொந்தமானது அல்ல என்றாலும், பிராது தபசில் சொத்து எங்களது அனுபவத்தில் எக்காலத்திலும் இருந்ததில்லை என்றாலும் சரியல்ல. பிரா துதபசில் சொத்து தற்போது வரை காலியிடமாக உள்ளது என்றாலும், அதில் நான் கூறுவதுபோல எந்த வீடும், கட்டிடமும் இருந்ததில்லை என்றாலும், தாவா சொத்தில் வீடு உள்ளதாக தெரிவித்து அதற்கு வீட்டு வரி ரசீது செலுத்துவதாக நான் கூறியுள்ளது பொய் என்றாலும், நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது வழக்கு தாவா சொத்தில் உள்ளதாக சொல்லப்படும் வீட்டிற்குரியது அல்ல என்றாலும், தாவா சொத்திற்கு எனது மூதாதையர்களும், நானும் பட்டா பெற முயற்சி எடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு தாவா சொத்து என் தந்தை மற்றும் தாய் வழி மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றாலும், வா.சா.ஆ.1 ஆவணத்தை பிறப்பித்துக்கொடுக்க என் தாயாருக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், மேற்கண்ட ஆவணத்தின் மூலம் எனக்கு தாவா சொத்து பொறுத்து எந்த உரிமையும் ஏற்படாது என்றாலும் சரியல்ல. வழக்குரையில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும், அசல் வழக்கு 3,4 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**